முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**மட்டம் III பரீட்சை – 2021 யூலை**

# (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2021-10-24
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 01

**ருவான்** என்பவர் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியில்** மென்பொருள் பொறியியலாளராகப் பணியாற்றும் ஓர் இலங்கைப் பிரஜை ஆவார். அவர் உள்ளகரீதியான மென்பொருள் ஒன்றை விருத்தி செய்வதற்காக 03 மாதங்களுக்கு சிங்கப்பூரில் அமைந்துள்ள **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** ஒரு துணை நிறுவனத்திற்கு 2020 ஆகஸ்ட் 29 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டார். அவர் 2020 டிசெம்பர் 02 ஆந் திகதி இலங்கைக்குத் திரும்பி வருவதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், கோவிட் 19 கட்டுப்பாடுகள் காரணமாக, அவரால் 2021 மார்ச் 14 ஆந் திகதியே இலங்கைக்கு வர முடிந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான இலங்கையின் வரிவிதிப்பு நோக்கங்களுக்காக **ருவானின்** வதிவிட அந்தஸ்தை (residence status) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட MSL கார்மென்ட்ஸ் (தனியார்) கம்பனி** ஆனது தைக்கப்பட்ட ஆடைகளைத் தயாரிக்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. HR பதிவுகளின்படி, வரிமதிப்பாண்டு 2020/21 காலப்பகுதியில் கம்பனியில் 120 ஊழியர்கள் பணியாற்றியதுடன் ஊழியர் ஒருவரின் மாதாந்தச் சம்பளம் ரூபா 50,000/- இற்கும் அதிகமானதாக இருந்தது. கம்பனியானது முத்திரைத் தீர்வை (stamp duty) நோக்கத்திற்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகப் பெறப்பட்ட சம்பளங்கள் மீது செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) இலங்கையிலுள்ள முத்திரைத் தீர்வைச் சட்டத்தின்படி முத்திரைத் தீர்வைக்குப் பொறுப்பான இரண்டு (2) குறிப்பான சாதனங்களைக் (specific instruments) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

***அஜித்*** என்பவர் கொழும்பில் வதியும் ஒரு வதிவுள்ள தனியாள் ஆவார். அவர் 2021 மார்ச் மாத காலப்பகுதியில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்துள்ளார்:

- அவர் 2010 டிசெம்பரில் ரூபா 5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்த அநுராதபுரத்தில் உள்ள ஒரு காணிக்கு சொந்தக்காரர் ஆவார். இந்தக் காணி 2021 மார்ச் மாதத்தில் ரூபா 8 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன் 2017 செப்ரெம்பர் 30 இல் அந்தக் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 6.8 மில்லியனாக இருந்தது. ***அஜித்*** இந்தக் கொடுக்கல் வாங்கலுக்கான தரகருக்கான கட்டணமாக ரூபா 50,000/- இனைச் செலுத்தியுள்ளார்.
- அவர் 12,000 பட்டியலிடப்படாத (unlisted) பங்குகளை ரூபா 1,000,000/- இற்கு விற்பனை செய்துள்ளார். இந்தப் பங்குகள் 2018 ஏப்ரலில் பங்கொன்று ரூபா 54/- இன்படி கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியது:***

மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ***அஜித்*** செலுத்த வேண்டிய மூலதன நயம் மீதான வரியை (capital gain tax) ***மதிப்பிடுக.*** (05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட ஹரித்த கம்பனியின்** தோட்ட மேற்பார்வையாளரான **சில்வா** வரிமதிப்பாண்டு 2020/21 காலப்பகுதியில் இருதய சத்திரசிகிச்சையொன்றுக்கு உட்பட்டிருந்தார். கம்பனியானது அவரது நீண்டகால சிறந்த சேவையைக் கருத்திற்கொண்டு கம்பனியின் நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதியத்தின் ஊடாக விசேட மொத்தப் பணக் கொடுப்பனவு ரூபா 1.2 மில்லியனை வழங்கியிருந்தது. **சில்வா**வால் பெறப்பட்ட விசேட மொத்தப் பணக் கொடுப்பனவானது வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரி நோக்கங்களுக்காக வரிவிதிப்புக்குட்பட்டது என **சில்வாவின்** வரி ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

***நீங்கள் செய்யவேண்டியது:***

**வரையறுக்கப்பட்ட ஹரித்த கம்பனியிடமிருந்து** பெறப்பட்ட விசேட மொத்தப் பணக் கொடுப்பனவு (lump sum payment) ***சில்வா***வின் ஒரு வரிவிதிக்கத்தக்க வருமானமா என்பதை ஏதாவது தீர்க்கப்பட்ட வழக்கினை மேற்கோள் காட்டி **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**நீலா** என்பவர் ஒரு வதிவுள்ள தனியாள் ஆவார். அவர் வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான எந்தவொரு காலாண்டுத் தவணைக் கொடுப்பனவையும் செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், அவர் வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான வருமான வரித் திரட்டினை வரிக் கொடுப்பனவுகளுடன் சேர்த்து 2021 மார்ச் 10 ஆந் திகதி சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி வரிமதிப்பாண்டிற்காக **நீலாவினால்** தாக்கல் செய்யப்பட்ட வருமான வரித் திரட்டு தொடர்பில் உதவி ஆணையாளர் வரிக் கணக்காய்வொன்றை நடத்தியபோது, குறிப்பிட்ட சில வருமானங்கள் **நீலாவால்** வரி நோக்கங்களுக்காக வெளிப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. உதவி ஆணையாளர் **நீலா**வுக்கு வரி மதிப்பீடொன்றை வழங்கியுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, காலாண்டு வருமான வரித் தவணைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமைக்குப் பொருத்தமான தண்டங்களைக் (penalties) **குறிப்பிடுக..** (03 புள்ளிகள்)

(b) உதவி ஆணையாளரால் **நீலாவுக்கான** வரி மதிப்பீடொன்றை வழங்குவதற்கான சட்டநியதி கால எல்லையைக் (time bar) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) வரி மதிப்பீட்டிற்கு எதிராக செல்லுபடியான முறையீடொன்றைச் செய்வதற்கு **நீலா** திருப்திசெய்ய வேண்டிய நான்கு (04) நிபந்தனைகளைப் **பட்டியலிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வின் டிரேடர்ஸ்** என்பது மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் ஒரு பங்குடமை ஆகும். **வின் டிரேடர்ஸின்** பங்காளர்களான **ராமன்** மற்றும் **சந்திரா** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 1:2 என்ற விகிதத்தில் பங்கிடுகின்றனர்.

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது:

| | **ரூபா** |
|---|---|
| மொத்த இலாபம் | 54,862,000 |
| நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் | 650,000 |
| | 55,512,000 |
| கழி: விநியோகச் செலவினங்கள் | (12,554,000) |
| நிருவாகச் செலவினங்கள் | (34,580,000) |
| **பங்குடமைக்கான நிகர இலாபம்** | **8,378,000** |

மேற்படி நிகர இலாபத்தைக் கணிப்பிடும்போது கீழ்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டுள்ளன:

(1) **ராமனும் சந்திராவும்** தலா ரூபா 200,000/- வீதம் மாதாந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டனர்.

(2) ஆண்டின் காலப்பகுதியில் களியாட்டச் செலவினமாக ரூபா 46,000/- செலவழிக்கப்பட்டது.

(3) **ராமன்** பங்குடமைக்கு கடன் ஒன்றை வழங்கியுள்ளதுடன் அதற்குரிய வட்டியாக ரூபா 108,000/- **ராமனுக்குச்** செலுத்தப்பட்டுள்ளது.

(4) பங்குடமை வேலைகளில் உதவி செய்ததற்காக **சந்திராவின்** மனைவிக்கு ஆண்டொன்றிற்கு ரூபா 150,000/- சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது.

(5) தேசிய வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 100,000/-.

சகல பிற செலவினங்களும் வரிவிதிப்பு நோக்கத்திற்காக அனுமதிக்கத்தக்கவை எனக் கருதிக்கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியது:**

வரிமதிப்பாண்டு 2020/21 இற்காக **வின் டிரேடர்ஸினால்** செலுத்தப்பட வேண்டிய பங்குடமை வருமான வரியைக் **கணிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 07

பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட கம்பனியான **வரையறுக்கப்பட்ட ருகீ (தனியார்) கம்பனி** நெகிழிப் பொதிகளை (plastic packages) தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இக்கம்பனி வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது:

(1) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற விற்பனை விபரங்கள் கீழ்வருமாறு:
(VAT தவிர்ந்த):

| | ரூபா |
|---|---|
| ஏற்றுமதி விற்பனைகள் | 24,500,000 |
| SVAT பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கான உள்நாட்டு விற்பனைகள் | 6,500,000 |
| ஏனைய நபர்களுக்கான உள்நாட்டு விற்பனைகள் | 124,000,000 |

(2) கம்பனியானது காலாண்டு காலப்பகுதியில் கீழ்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியிருந்தது:

| | ரூபா |
|---|---|
| மூலப்பொருட்களின் இறக்குமதி மீது | 7,825,000 |
| பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது | 454,000 |
| பணிப்பாளர் ஒருவரால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் காரொன்றின் பழுதுபார்ப்புச் செலவுகள் மீது | 13,500 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT ரூபா 954,600/-.

(4) காலப்பகுதியுடன் தொடர்புடைய சகல எளிமைப்படுத்தப்பட்ட VAT (SVAT) வரவு உறுதிச்சீட்டுக்களும் (credit vouchers) கம்பனியால் சேகரிக்கப்பட்டன.

(5) கம்பனியானது காலாண்டு காலப்பகுதியில் மாதாந்த VAT தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 2,000,000/- இனைச் செலுத்தியுள்ளது.

*(நியம VAT வீதம் 8% எனக் கொள்க.)*

**நீங்கள் செய்யவேண்டியது:**

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதி சேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட நீட் மனுபெக்சரிங் (தனியார்) கம்பனி** என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இது உள்நாட்டுச் சந்தைக்காக நுகர்வுப் பொருட்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட நீட் மனுபெக்சரிங் (தனியார்) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(1) சகல செலவினங்களும் தாக்கல் செய்யப்பட்டு சகல வருமானங்களும் வரவு (crediting) வைக்கப்பட்டதன் பின்னரான 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்திய நிகர இலாபம் ரூபா 64,250,000/- ஆக இருந்தது. 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மொத்தப் புரள்வு ரூபா 954,600,000/- ஆகும்.

(2) பிற வருமானங்களின் கூறுகள்:

| | ரூபா |
|---|---|
| பங்கிலாப வருமானம் (மொத்தம்) | 1,500,000 |
| நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் (மொத்தம்) | 2,254,000 |
| லொறியின் விற்பனை மீதான இலாபம் | 122,000 |
| | **3,876,000** |

(3) 2021 மார்ச் 31 இல் ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு:

| சொத்து | கொள்வனவு ஆண்டு | கிரயம் (ரூபா) |
|---|---|---|
| காணி | 2014/15 | 24,000,000 |
| கட்டடங்கள் | 2015/16 | 46,000,000 |
| இயந்திரம் | 2016/17 | 12,450,000 |
| மோட்டார் லொறிகள் | 2018/19 | 8,650,000 |
| மோட்டார் லொறி | 2020/21 | 4,320,000 |
| அலுவலக உபகரணம் | 2019/20 | 1,656,000 |
| கணினிகள் | 2019/20 | 450,000 |
| கணினி மென்பொருள் | 2020/21 | 840,000 |
| | | **98,366,000** |

- வரிமதிப்பாண்டு 2016/17 இல் ரூபா 3,250,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு லொறி 2020 யூன் மாதம் ரூபா 1,200,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. லொறியின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானத்தைப் பயன்படுத்தி ஆண்டின்போது ஒரு புதிய லொறி கொள்வனவு செய்யப்பட்டது.
- கம்பனியானது தொக்கு முகாமைக்காக ஒரு புதிய மென்பொருளைக் கொள்வனவு செய்ததுடன் அதன் கிரயமானது 6 ஆண்டுகள் காலப்பகுதியினுள் கழித்துத் தீர்க்கப்படுகிறது (amortized).

(4) நிருவாகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூபா 16,457,000/-.
- கம்பனியானது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வசதிகளை வழங்குவதற்கென இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு ரூபா 1,000,000/- நன்கொடை வழங்கியிருந்தது. மேலும், தேசிய சிறுநீரக நிதியத்திற்கு ரூபா 500,000/- நன்கொடை வழங்கியிருந்தது.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 4,214,000/-.
- பொருளாதார சேவைக் கட்டணப் பதிவழிப்பு ரூபா 1,485,000/-.

(5) விநியோகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- குறித்த கடன்பட்டோருக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு ரூபா 3,250,000/- ஆக இருந்ததுடன் கடன்பட்டோரில் 2% இற்குச் சமனான பொது ஏற்பாடு ரூபா 1,300,000/- ஆகவும் இருந்தது.
- கம்பனியினது உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்ட தொழில்துறை ஆய்வொன்று தொடர்பில் இலங்கையிலுள்ள ஆய்வு நிறுவகமொன்றுக்கு ரூபா 1,500,000/- செலுத்தப்பட்டது.

(6) கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

- ஆண்டின்போது செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா 568,000/-.
- வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவு களாக ரூபா 5,000,000/- இனைக் கம்பனி செலுத்தியிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வரிமதிப்பாண்டு 2020/21 இற்காக **வரையறுக்கப்பட்ட நீட் மனுபெக்சரிங் (தனியார்) கம்பனியின்** பின்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி வருமான வரி

***(குறிப்பு:** ஏதாவது செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

தொழில்முறை ரீதியில் பட்டயக் கணக்காளர் ஒருவராக இருக்கின்ற **சுரங்கி** ஒரு வதிவுள்ள தனியாள் ஆவார். அவர் இலங்கையிலுள்ள கம்பனி ஒன்றின் பிரதம நிதி அலுவலராகப் பணியாற்றுகின்றார்.

வரிமதிப்பாண்டு 2020/21 *(இதன் பின்னர் 'ஆண்டு' எனக் குறிப்பிடப்படும்)* இற்கான அவரது வருமானம் தொடர்பில் பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) ஊழியத்திலிருந்தான (Employment) வருமானம்:

- மொத்தச் சம்பளம் - மாதாந்தம் ரூபா 300,000/-.
- பயணப் படி (travelling allowance) – மாதாந்தம் ரூபா 50,000/-.
- 2020 டிசெம்பரில் செலுத்தப்பட்ட உபகாரத் தொகை (bonus) - ரூபா 300,000/-.

- ஆண்டின் காலப்பகுதியில் அவர் சத்திரசிகிச்சை ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டிருந்தார். கம்பனியின் சகல ஊழியர்களுக்கும் கிடைக்கக்கூடியதாகவுள்ள மருத்துவத் திட்டத்தின்கீழ் ரூபா 240,000/- அவருக்கு கம்பனியால் மீளளிக்கப்பட்டிருந்தது.
- ஆண்டின் காலப்பகுதியில் அவரது கையடக்கத் தொலைபேசிக் கட்டணத்தை கம்பனி பொறுப்பேற்றுக் கொண்டதுடன் அதன் பொருட்டு ரூபா 24,000/- இனை கம்பனி மீளளிப்புச் செய்திருந்தது.
- ஆண்டின் காலப்பகுதியில், அவர் இந்தியாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கம்பனி சார்பாகப் பங்கேற்றிருந்ததுடன் அதற்கான விமானப் பயணச்சீட்டு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றுக்கான செலவு ரூபா 500,000/- ஆனது கம்பனியால் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.
- முன்கூட்டிய தனிநபர் வருமான வரியாக (APIT) ஆண்டிற்குக் கழிக்கப்பட்ட வரி ரூபா 90,720/-.

(2) **சுரங்கி** 2019 சனவரி 15 ஆந் திகதியிலிருந்து தனது கணவனின் இல்லத்தில் வசிக்கிறார். அவரிடம் கண்டியில் புதிதாக நிருமாணிக்கப்பட்ட ஒரு வீடு இருப்பதுடன், அதனை ரூபா 100,000/- என்ற மாதாந்த வாடகைக்கு விடுமுறை இல்லம் ஒன்றாகப் பயன்படுத்துவதற்காக கம்பனி ஒன்றிற்கு வாடகைக்குக் கொடுத்துள்ளார். இந்த வீட்டின் வருடாந்தப் பெறுமதி ரூபா 1,000,000/- என்பதுடன் வாடகைக்குப் பெற்றவரால் 30% இல் சோலைவரி செலுத்தப்பட்டுள்ளது.

(3) **சுரங்கி** அரச வங்கி ஒன்றில் ரூபா 1,000,000/- நிலையான வைப்பு ஒன்றைக் கொண்டிருப்பதுடன் ஆண்டின்போது அதற்கான வட்டியாக ரூபா 72,000/- இனைப் பெற்றுக்கொண்டார். வங்கியானது வட்டி மீது நிறுத்தி வைத்தல் வரியைக் (WHT) கழிக்கவில்லை.

(4) **சுரங்கி,** பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்துள்ளதுடன் அந்தப் பட்டியலிடப்பட்ட கம்பனிப் பங்குகளின் கொள்வனவுக்காக ஆண்டின்போது ரூபா 900,000/- இனைச் செலவு செய்துள்ளார். ஆண்டின்போது கிடைத்த பங்கிலாப விபரங்கள் கீழ்வருமாறு:

- பெறப்பட்ட பங்கிலாபத்திலிருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபம் - ரூபா 35,000/-
- ஈட்டப்பட்ட இலாபத்திலிருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபம் - ரூபா 145,000/-

(5) **சுரங்கி,** உள்நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் MBA பட்டப்படிப்பைத் தொடர்வதுடன் அதற்காக ஆண்டின்போது ரூபா 250,000/- ஐ அவர் செலுத்தியுள்ளார்.

(6) அவர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபா 50,000/- பெறுமதியான பொருட்களை நன்கொடையாக வழங்கியுள்ளதுடன் ஹொரண தள வைத்தியசாலையில் உள்ள கோவிட் 19 விடுதிக்கு ரூபா 100,000/- பெறுமதியான மருத்துவ உபகரணங்களையும் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

(7) **சுரங்கி** வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 10,000/- செலுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வரிமதிப்பாண்டு 2020/21 இற்கு **சுரங்கி**க்காக பின்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

*(**குறிப்பு:** ஏதாவது வருமானம் வரிவிதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |